# திரு அவையில் பொது நிலையினரின் முதிர்ச்சி



பணி. எஸ். ஜே. இம்மானுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு அவையில் பொதுநிலையினரின் முதிர்ச்சி

பணி. எஸ். ஜே. இம்மானுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்புகமுன்

திருஅவைகள் மறுமலர்ச்சியடைய வேண்டும். இதற்கு பொது நிலையினர் விழித்தெழுந்து தமது தன்மையையும், இடத்தையும், உரிமைகளையும், பணியையும், நன்குணர்ந்து செயல்பட வேண்டும். இதுவே அகில திருச்சபையும் 2ம் வத். சங்கத்தில் (1962-1965) ஆர்வத்துடன் ஆராய்ந்தெடுத்த தீர்க்க முடிவு.

"தமது வரைவிலக்கணத்திற்கு ஏற்றதாகவும், திரு ஆட்சி அமைப்பாளருடன் கூடிப் பணிபுரியக் கூடியதாகவுமுள்ள பொதுநிலையினர் இல்லாவிட்டால் அவ்விடத்திலே திருச்சபை இன்னும் உண்மையாகவே வேரூன்றவுமில்லை, முழுமையமாக வாழவுமில்லை, மனிதர் நடுவே கிறிஸ்துவின் சின்னமாகவு மில்லை"

( தி.ந..ப.21)

சுருங்கக் கூறின், பொதுநிலையினர் செயற்படாத திருஅவை வேரற்ற மரம், கருத்தற்ற சின்னம், உயிரற்ற பிணம்.

இச் சத்தியத்தை எமது ஆயர்கள், குருக்கள், துறவிகள் பொதுநிலையினர் அனைவர் முன் நிறுத்தவும், அச்சத்தியம் விடுக்கும் சவால்களை அனைவரும் ஏற்கவும் உதவியாக இச்சிறு நூல் பயன்படுவதாக.

2ம் வத் சங். நேரில் அனுபவிக்கும் பாக்கியம் பெற்றிருந்தேன். அதன் பின் 1973-1976 ஆண்டுகளில் உரோமையிலிருந்து திரு அவையில் பொது நிலை பணியாளரைப் பற்றி ஆராய்ச்சி செய்து முகமற்ற பணியாளர்களைக் அங்கீகரித்தல் - ( Recognizing the Faceless Ministers ) என்ற நூலை 1977ல் வெளியிட்டேன்.

அதன் பின் கண்டி தேசிய குருமடத்தில் பேராசிரியராகக் கடமை ஆற்றினேன். அக் காலத்தில் இச் சிறிய புத்தகத்தின் முதற் பதிப்பை (1981) வெளிக்கொணர்ந்தேன். இன்றைய தமிழ் திரு அவைகளின் தேவையை உணர்ந்து அதன் 2ம் பதிப்பை சில திருத்தங்களுடன் யாழில் வெளியிடுகின்றேன்.

பணி. எஸ். ஜே. இம்மானுவேல்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்
இலங்கை
23.07.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

# திரு அவையில்
# பொதுநிலையினரின் முதிர்ச்சி
# (Maturity of the laity)


1. திரு அவையின் மறுமலர்ச்சியில் ஓர் கொப்பர்னீக்கன் புரட்சி
   (a Copernican Revolution with respect tot he church)

2. பொதுநிலையினர் பொருளை மீண்டெடுக்க
   (Rediscovering the Laity)

3. பொது நிலையினரின் வரைவிலக்கணத்திற்கான அம்சங்கள் ...

4. பொது நிலையினரின் வாழ்வும் பணியும்
   4.1 அப்போஸ்தலத்துவம் (Lay Apostolate)
   4.2 பொதுநிலைத் திருப்பணி( Lay Ministry)

5. பொது நிலையினரின் ஆன்மீகம் ( Lay Sprituality) ...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் 1

# 2 ஆம் வத். சங். ஊடாக திருச்சபையில் ஒரு மறுமலர்ச்சி! கொப்பனீக்கசீன் புரட்சியை ஒத்தது

பாப்பரசர் 23 அருளப்பர் தலைமையில் கூட்டப்பட்ட 2ம் வத்திக்கான் சங்கம் - திருச்சபையின் சரித்திரத்தில் 21வது ஆயர் சங்கம் - 1962-1965. முன்பொரு பொழுதும் நடைபெறாத முறையில் திருச்சபையின் பார்வையிலும் அணுகுமுறைகளிலும் பணி முறைகளிலும் பெரும் புரட்சியான முடிவுகளை எடுத்தது. இந்த ஆழமான மாற்றங்களை 15ம் நூற்றாண்டில் வானசாத்திரத்தில் ஏற்பட்ட கொப்பனீக்சன் புரட்சிக்கு ஒப்பிடலாம்.

### 1.1 கொப்பனீக்கசீன் புரட்சி என்றால் என்ன?

'பூமியே அகிலத்தின் மையம். இப்பூமியைக் கதிரவன் ஒழுங்காகச் சுற்றி வருகின்றான்." என்ற கொள்கை ஆயிரமாயிரம் ஆண்டுகளாக – கி.பி 15 ஆம் நூற்றாண்டுவரை சகல மனிதராலும் சவாலின்றிய வான சாஸ்திர உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (Geo-centric Theory).

ஆனால் போலந்து நாட்டில் பிறந்த நீக்கிலஸ் கப்பர்நீக்கஸ், பாதுவை பல் கலைக்கழகத்தில் வான சாஸ்திர விஞ்ஞானியாக 16ஆம் நூற்றாண்டில் இக்கொள்கைக்கு முற்றுப்புள்ளி போட்டார். கதிரவனே அகிலத்தின் மையமென்றும், பூமி இக்கதிரவனையே ஒழுங்காக சுற்றிவருகின்ற ஒரு கிரகமென்றும் நிரூபித்து, மனிதர்களை அதிசயிக்க வைத்தார். (Helio- centric Theory). இதுவே விஞ்ஞான உலகில் கப்பர்னீக்கசீன் புரட்சி என்று அழைக்கப்படுகின்றது.

### 1.2 இப்பேர்ப்பட்ட புரட்சியொன்று இந்த நூற்றாண்டில் 2ஆம் வத்திக்கான் சங்கத்தில் திருச்சபையில் நடந்தேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கு வெளியே இயங்கும் உலகை எப்படி புரிந்து சேவை செய்வதென்பதிலேயும் திருச்சபைக்குள்ளே தாம் எப்படி தம்மை ஒழுங்கு படுத்த வேண்டுமென்பதிலேயும் பல ஆழமான மாற்றங்கள் நடந்தேறின.

### 1.2.1 உலகத்தையும் திருச்சபையையும் நோக்கும் பொழுது,

திருச்சபை ஒரு குறைவற்ற நிறைவான மைய ஸ்தாபன மென்றும் உலகம் முழுவதும் இந் நிறைவான திருச்சபையுடன் இணைந்து அதைச் சுற்றி சுழல்வதிலேயே நிறைவையடை கின்றதென்றும் கருதி வந்தோம். இது தவறு.

2ஆம் வத்திக்கான் சங்கம் அப் பார்வையை மாற்றி அமைத்து விட்டது. திருச்சபை உலகத்திலேயேயிருந்து உலகத்திற்கு இரட்சணிய சேவை செய்வதற்காக உழைக்கும் அருட்சாதனமாக அமைகின்றதென்று கற்பிக்கின்றது! உலகம் திருஅவைக்காக வல்ல, திருச்சபையே உலகத்தின் இரட்சணிய நிறைவுக்காக இறை ஆட்சியை இவ்வுலகில் தொடங்குவதற்காக உழைக்கும் சேவைக் கருவியாக மாறிவிட்டது. (தி. ப. கோ.1). உலகை மையமாக வைத்து அதிலுள்ளவற்றிற்கு இரட்சணிய சேவை செய்ய சுழன்று வருகின்றது.(mission of the church is to move around in salvific service for the coming of Gods Kingdom like a waiter- diakonia- going around the tables)

### 1.2.2 திருஅவையின் பணிகளும் பணியாளர்களும்

முதலில் பணிகளைப் பற்றியும் பணியாளர்களைப் பற்றியும் பேசும் போது அன்று இயேசு எவற்றை என்னைத்தை கருதினார்? இயேசு பாவித்த அரமெய்க் வார்த்தையை அவரின் சீடர்கள் கிரேக்க மொழியில் தியாக்கொனியா (diakonia) என்றனர். அச் சொல் கிரேக்க சூழலில் உணவு அருந்தும் போது மேசையைச் சுற்றிச் சேவை செய்பவர்களையே குறிக்கும். சேவையாளர் ஒரே இடத்தில் தரித்து நிற்பவர்களல்லர். மாறாக விருந்தாளிகளை சுற்றி வந்து அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்பவர்கள். அதேபோன்று கிரகங்கள் சுற்றிவருவதை பற்றி நாம் பேசும் போது திருஅவையையும் அதன் பணிவிடை செயல்களையே குறிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அதாவது*

1) திரு அவை

2) பொது நிலையினர்

3) திருநிலைப்படுத்தப்பட்ட பணியாளர்கள்

இவர்களின் இடத்தையும் பணியையும் பற்றி பேசும் போது, புதிய கொப்பர்நீக்கசின் புரட்சியில் எவ்விதம் எமது கிரகங்களைப் பற்றிய பார்வை மாற்றம் அடைந்ததோ அதேபோல் எமது திருச்சபைக்குள்ளும் எமது பார்வையிலும் பணியிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.


*அது பின்வருமாறு.*

**1.2.3 திருச்சபையினுள் பொதுநிலையினரையும் திருப்பணி யாளர்களையும் நோக்கும் பொழுது**

இவர்கள் இடையில் உள்ள தொடர்பை நோக்குமிடத்தில், திருப்பணியாளரே அருளினாலும், ஆவியினாலும் நிரப்பப்பட்ட மத்திய அத்திவாரமென்றும், பொதுநிலையினர் இவ்வதிகார பீடத்தை அமைச்சலுடன் பணிந்து, அமைதியாகச் செவிமடுத்து, அவர்களின் கட்டளையே தமது கடமையாகச் செயற்படுத்தும் பெரும்பான்மையினர் என்றும் கருதப்பட்டது. சுருங்கக்கூறின் திருநிலைப்படுத்தப்பட்ட திருப்பணியாளரே திருச்சபையில் நிறைவானவர் என்றும், அதிகாரிகள் என்றும், ஏனையோர் அப்பணியாளரின் பணிவிடைக்காரர் என்றும், முக்கியத்திலும், தரத்திலும் குறைந்த பணியாளர் என்றும் கருதப்பட்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**GEO CENTRIC UNIVERSE**
பூமி மைய அகிலம்

**HELIO CENTRIC UNIVERSE**
சூரிய மைய அகிலம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Copernican Revolution 16th Century)

From Church centred world to a World centrd church

(Vatican 2 Revolution 20th century)

From Hierarchy – centrd-Lay-People to a Lay-People centrd Hierarchy

**a)** திருச்சபை மையமாகக் கொண்ட உலகம்

**a)** உலகத்தை மையமாகக் கொண்ட திருச்சபை

**b)** திருப்பணியினரை மையமாகக் கொண்ட திருச்சபை

**b)** மக்களை மையமாகக் கொண்ட திருச்சபை

ஆனால் 2 ஆம் வத்திக்கான் சங்கம் இக்கொள்கையை மாற்றி அமைத்திருக்கின்றது. பொதுநிலையினர் திருப்பணியாளருக்காக வல்ல, திருப்பணியாளரே பொதுநிலையினருக்காக என்றும், பொதுநிலையினருக்கு . சேவை செய்யவே திருப்பணியாளர் அருளும் அதிகாரமும் பெற்றிருக்கின்றனர் என்றும் சங்கம் கற்பிக்கின்றது. (தி.ப.கோ.18)

மேலும் திருப்பணியாளர் செயற்படும் திருச்சபையாகவும் பொதுநிலையினர் மௌன திருச்சபையாகவும் இருப்பது முறையல்ல. பணியாளரும், பணியாளரின் சேவையால் திடப்படுத்தப்பட்ட பொது நிலையின ரும், ஒரே இறைமக்களாக இணைந்து பணிபுரியும் அல்லது இயங்கும் திருச்சபையாக இருக்கவேண்டுமென்றும் சங்கம் கற்பிக்கின்றது. (தி.ப.கோ. 13c)

மேற்கூறப்பட்ட இரண்டு கருத்துக்களையும் நாம் ஆரம்பத்தில் எடுத்து கொண்ட உதாரணத்தின் மூலம் தெளிவாக புரிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவேதான் இன்று திருச்சபை இயலில் (Ecclesiology) உலகத்தின் மக்களையும், அவர்களின் வாழ்க்கை பிரச்சினைகளையும், மைய மாகக்கொண்ட கிறிஸ்தவத்தைப் பற்றிப் பேசப்படுகின்றது. (World- centred or secular Christianity)

ஆனால் இவைகள் உலகத்தை மையமாகக் கொண்ட திருச்சபை யின் பணிகளை பற்றியல்ல இவ்விடம் எமது கூற்று. திருச்சபைக் குள்ளே திரு பணியாளர் (ordained ministers), பொதுநிலையினர் (laity) என்று பொறுப்பு-கடமைகள் காரணமாகப் பிரிக்கப் பட்டிருக் கும் (தி.ப.கோ.13c) இவர்களுக்கிடையே இருக்கும் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் மாற்றம், விசேடமாகப் பொது நிலையினர் பற்றி மீண்டெடுக்கப்பட்ட புதிய உண்மைகளுமே, இங்கே எமது கவனத்தை வேண்டுகின்றன. ஆகையால் தான் கப்பர்னீக்கஸ் புரட்சியின் உதாரணத்தை ஆரம்பத்தில் எம்முன் நிறுத்தி இருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் 2

# பொதுநிலையினர் பொருளை மீண்டெடுக்க...

### 2.1 பொதுநிலையினர்

இவ்வார்த்தை சரித்திரம் நிறைந்த ஓர் ஆங்கில வார்த்தையின் (Laity) தமிழாக்கமாகும். திருநிலைப்படுத்தப்பட்ட திருப்பணியாள ருக்கு அல்லது திருநிலையினருக்கு (Clergy) என்றும், மாறாக-எதிராக பொதுப்பணியினர் அல்லது பொது நிலையினர் என்றும் மொழி பெயர்க்கப்படுகின்றது. 'பொது' (Common) என்றால் 'திரு' (Sacred) என்பதற்கு எதிர்ப்பதமாகக் கருதப்படுகின்றது. 'திரு' எனும் போது சர்வ சாதாரண மானவைகளில் இருந்து ஒரு விசேட, புனித அல்லது தெய்வீக நோக்கத்திற்காகப் புறம்பாக்கப் பட்டதாக கருதப்படும். ஆகையால் பொதுநிலையினர் என்பது திரு நிலைப்படுத்தப்படாது எவ்வித விசேட, புனித- தெய்வீக நோக்கத் திற்காகவும் - பணிக்காகவும் தெரியப்படாது அல்லது ஒதுக்கப் படாது சாதாரண பகுதியினராக கருதப்பட்டது.

**வார்த்தையின் இழுக்கு:**

இவ்வார்த்தை திருநிலைப்படுத்தப்படாத பெரும்பான்மை கிறிஸ்த வர்களின் ஆதிச் சரித்திரத்தையும் அதன் இயல்பான நிலைமையை யும் எடுத்துக்காட்ட வலிமையற்றது. ஆதியில் திருநிலைப்படுத்தப் படாதவர்களையே Laity என்று அழைத்தனர். விவிலிய ஊற்றில் (Laos) 'மக்கள்' என்று கருதப்பட்டிருந்தாலும், சரித்திரத்தில் Laity எனப்பட்டவர்கள், படியாத பண்பாடு குறைந்த மடையர்களாகவே கணிக்கப்பட்டனர்.

திரு நிலைப்படுத்தப்பட்டவர்கள் இலத்தீன் மொழியையும் தத்துவ மெய்யியல் இறையியல் போன்றவற்றை கற்றவர்களென்றும் திருச்சபை யில் தெய்வீக அதிகாரத்தைப் பெற்றவர்களென்றும் கருதப்பட்டு, ஏனையோர் அதற்கெதிராக படியாத பண்பாடற்ற மக்களாக கணிக்கப் பட்டனர். இன்றைக்கும் ஆங்கில மொழியில் (Layman) என்னும் பொழுது எந்த விடயத்திலும் விஷயம் புரியாத சாதாரணமான வர்கள் என்று கருதப்படும்.

ஆகையால் பொதுநிலையினர் எனப்படுவோருக்கு சரித்திரத்தினால் சுமத்தப்பட்ட இழுக்கான, குறைவான பதங்கள் அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றப் பட்டு, அவர்களின் பெருமையான நிறைவான அம்சங்கள் அடங்கிய நேரான வரைவிலக்கணத்தைத் திருச்சபை மீள அமைக்க 2ம் வத். சங்கம் வழி வகுத்திருக்கின்றது.

**2.2 குருகுலம் இறைகுலமாக பிரிந்து வளர்ந்தனர்**

குருகுலம், இறைகுலம் என்ற வேறுபாடு ஆதித்திருச்சபையில் இருந்த தில்லை. ஒவ்வொருவரும் தமக்கு அளிக்கப்பட்ட கொடைகளுக்கும் தகமைகளுக்கும் ஏற்ப இறைபணி புரிந்தனர் என அறிகின்றோம். ஆனால் படிப்படியாக சிறப்பாக 4 ஆம் நூற்றாண்டு தொட்டு 15ஆம் நூற்றாண்டு வரை கொன்ஸ்ரன்ரையின் காலத்தில் (Constantine-era) திருச்சபைத் தலைவர்கள் அதிகாரத்திலும், ஆதிக்கத்திலும் ஊறி வளர்ந்து, அரசாங்கங்களின் ஆதரவையும், சலுகைகளையும் பெற்று, ஓர் உயர்ந்த குலமாக இறைமக்களிலும் மேலானவர்களாக வாழ்ந்து வந்தனர். குருகுலம், கற்பிக்கும் திருச்சபையாகவும் (Ecclesia Docens) இறைகுலம் கற்பிக்கப்படும் திருச்சபையாகவும் (Ecclesia Discens) பிரிந்து இரு பகுதியினருக்கும் இடையே வேறுபாடு வளர்ந்து ஓங்கியது. குருகுலத்தோர் ஏதோ உயர்ந்த உலகிலிருந்து மெய்யியல், இறையியல் போன்ற சாஸ்திரங்களை இலத்தீன் மொழியில் கற்று அதிகாரத்துடன் இறங்கி வந்தோர் போலிருந்தனர். இவர்கள் திருச்சபையை சார்ந்தவைகளில் அதிகாரமுள்ளவர்களாகவும் மெய்யியல், இறையியல் சாஸ்திரங்களில் வல்லுனர்களாக, சலுகைகள் நிறைந்தவர்களாகவும் இருக்க, இறைகுலத்தவர் ஒரு அதிகாரமற்ற, உணர்ச்சியற்ற, ஈடுபாடற்றவர்கள் ஆகவும், சாஸ்திரங்கள் அறியாத வர்களாகவும், உரிமைகளோ, செல்வாக்கோ, அற்றவர்களாகவும் இருந்தனர்.

ஆதியிலே ஒரே தரத்தையுமுடைய சீடர்கள், பின்பு இறைமக்களின் சேவையைப் பொறுத்தமட்டில் பிறந்த வேறுபாடுகள் (Functional Differences) காலாகாலத்தில் திருச்சபைக்குள்ளே பிரிவு வளர்ந்து இரண்டு பிரிந்த குலங்களை ஏற்படுத்தி இருக்கின்றது.

இறைமக்களுக்கும் திருப்பணியாளருக்குமிடையில் அடிப்படையாக இருக்க வேண்டிய ஒற்றுமையையும், இணைப்பையும் குலைத்து விட்டது. குருகுலத்தின் ஆதிக்கம் நிறைந்த திருச்சபையில் இருந்து இறைமக்கள் பல்வேறு விதங்களில் பிரிந்து சென்றனர். திருச்சபைக்குள்ளே குருத்துவவாதம் (Clericalism) வழிபாட்டிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விலும், அமைப்பிலும், அதிகாரத்திலும், ஞானவாழ்விலும் வளர்ந்து வந்தது. குருகுலமே திருச்சபை. குருக்களே நிறைவான கிறிஸ்தவர்கள், குருக்களே சரியான அறிவையும், வாழ்க்கை முறையையும் கொண்டவர்களெனக் கருதப்பட்டது.

ஆகையினால் இறை குலத்தார் இரட்சணியம் அடைவதற்கு உலகத்தைவிட்டோடி, திருமணம், குடும்பம், பாலியல் போன்றவை களை வெறுத்துக் குருக்களைப்போல் இலட்சிய வழி சீவிப்பதே சிறந்தது எனக் கருதப்பட்டது. குருத்துவ குலத்தோர் முதலாந்தரக் கிறிஸ்தவரென்றும், ஏனையோர் வலிமையற்ற, உயர்ந்த இலட்சிய மற்ற, இரண்டாந்தரக் கிறிஸ்தவரென்றும் கருதப்பட்டது.

## 2.3 முழுத் திருச்சபை இயலிலே...

## (in a total ecclesiology)

திருச்சபைக்குள் பொதுநிலையினரின் புதிய இடத்தை, பதவியை, பங்கைத் தேடுகையில் பணியாளரும் தமது புதிய தன்மையையும், பணியையும் தாமாகவே கண்டடைவர். ஆகையால் பொதுநிலை யினரைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கென்று தனிமையான மாற்றங் கள் இல்லை. முழுத்திருச்சபையின் தன்மையையும், பணியையும் விளக்கிக் கூறும் முழுமையான திருச்சபை இயலே பொதுநிலை யினரின் தன்மையையும் பணியையும் விளக்க முடியும். இதைத் தான் உலக பிரசித்தி பெற்ற பிரெஞ்சு இறையியலாளர் தந்தை (Y. Congar) கூறுகின்றார்: There can be only one sound and sufficient theology of the laity, and that is a total ecclesiology. (Lay people in the church. P. xvi)

திருச்சபை ஆட்சியாளரோடு பொதுநிலையினர் கூடி எங்கு உண்மையாக உடனிருந்து உழைக்கவில்லையோ அங்கே திருச்சபை உண்மையாக நிறுவப்படவுமில்லை முழுமையாக வாழவுமில்லை மனிதர் நடுவே கிறிஸ்துவின் நிறைவான அடை யாளமாகத் துலங்கவுமில்லை எனச் சொல்லலாம் என வத்திக்கான் சங்கம் கற்பிக்கின்றது. (தி.நி.பணி. 21)

## 2.4 2ம் வத். சங்கம் கற்பித்ததைக் கடைப்பிடிப்போமாக

பொதுநிலையினரதும் திருப் பணியாளரினதும் நிலையைப் பற்றியும் பணியைப் பற்றியும் பற்பல கற்பிக்கப்பட்டிருப்பினும் சங்கத்தின் கற்பித்தலுக்கும் எமது கடைப்பிடித்தலுக்கும் இடையில் ஒரு நீண்ட பயணம் இருக்கின்றது. இப் பயணத்தை பணியாளரும் பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையினரும் சம ஆர்வத்துடனும், துணிவுடனும் கையேற்க வேண்டும். ஆனால் இரு பகுதியினரும் நீண்ட சரித்திரத்தில் ஒருவரை யொருவர் தள்ளிவிட்டாற் போல தமது உண்மை இடத்தை இழந்து விட்டனர். குருக்கள் திருச்சபை எனும் ஆலயத்தின் 'அடுத்தாரில்' (பீடத்தின் மேடை யில் அல்லது பின்னால்) ஒதுக்கப்பட்டு விட்டனர். பொது நிலையினர் அவ்வாலயத்தின் உள்ளேயிருந்து வெளியே தள்ளப்பட்டு விட்டனர்.

இப்போது திருச்சபையினுள் உண்மை இடத்தை தேடியடைவதற்கு இருபகுதியினரும் கடினமான பயணத்தைத் துணிவுடன் மேற்கொள்ள வேண்டும். குருக்கள் மேடையை விட்டு இறங்கி அடுத்தாரை விட்டு மக்கள் மத்தியில் வர வேண்டும். பொதுநிலையினர் ஆலயத்தி னுள்ளே உரிமையுடன் புகவேண்டும்.

## 2.5 மார்ட்டின் லூதரின் முயற்சி

இக்குருத்துவ வாதத்திற்கு எதிராக 16 ஆம் நூற்றாண்டில் மார்டின் லூதரும், சீர்திருத்தவாதிகளும் பல்வேறு மாற்றங்களுக்காகவும் திருத்தங்களுக்காகவும் போராடினர். (Reformation). ஆனால் திருச்சபையோ இதற்கு எதிராக தனது குருத்துவ அமைப்பைக் கடுமையான சட்ட திட்டங்களினால் பலப்படுத்தி, சீர்திருத்தவாதி களின் கோரிக்கைகளை முழுமையாக கண்டித்து (Counter reformation-Tridentine Council) நடாத்தியது.

ஆகையினால் பல நூற்றாண்டுகளாகக் குருகுலம் திருச்சபையின் சிறிய பகுதியாக இருந்தும் தனது குருத்துவ வாதத்தினால் பெரும் பான்மையான இறைகுலத்தை கட்டுப்படுத்தி, ஆண்டு, அடக்கி, ஒடுக்கி வழிநடத்தியது. ஆகையினால் மார்டின் லூதரைப் பின்பற்றிய சபைகள் படிப்படியாகக் குருத்துவமற்று மக்களாக வளர்ந்துவர, றோமன் கத்தோலிக்க திருச்சபை இறைமக்களற்ற ஒரு குருகுலமாக வளர்ந்து வந்தது! (Catholic church as people-less clergy and reformation churches as clergy-less people)

ஆகையினால் சரித்திரத்தினுள் குருகுலம்- இறைகுலம் (clergy-laity) எதிராளிகளாக தவறான முறையில் வளர்க்கபட்டதனால், இப்பிரி வினையை முற்றாக அகற்றிவிட வேண்டுமென்று பல ஐரோப்பிய இறையியல் வல்லுனர்கள் 2ம் வத். சங்கத்திற்கு முந்திய காலங்களில் ஆர்வமாக செயலற்பட்டனர். (Yves Congar, Ferdinand Klostermann, Hans Kung)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரம் 3

# பொது நிலையினரின் புதிய வரைவிலக்கணம்

## 3.1 2-ம் வத்திக்கான் சங்கத்தின் அறிவுரை

2ஆம் வத்திக்கான் சங்கம் இதைப்பற்றி தெளிவுபடுத்துகையில், குரு குலம், இறை குலம், என்று இரு பிரிவான கட்சிகளைத் திருச்சபையில் ஏற்படுத்தவல்ல.- மாறாக திருச்சபையான மறை உடலில் ஒருவர் ஒருவருக்கிடையில் ஒற்றுமையையும், ஒருமை யையும் பேணி வளர்ப்பதற்காகவும் இணைப்பதற்காகவுமே. (foster unity of collaboration in same body) (தி.ப.கோ.32). இறைமக்களின் ஒற்றுமை அங்கத்தவர்களனைவரும் ஒரேவிதமான பணிபுரிவதல்ல. பலவிதமான பணிகள் புரிவதிலே ஒன்றித்து நிற்க வேண்டும். (Unity- not in uniformity but in diversity of functions)

குருகுலத்தவரும், பொதுநிலையினரும் பணியினால் மாத்திரமல்ல, தம் சாரத்திலும் வேறுபட்டு இருக்கின்றனரென்று பலர் விவாதிக்கக் கூடும். ஆனால் இவ்விரு நிலையினரும் அடிப்படையில் கிறிஸ் தவர்களென்றும், அதுவே அவர்களுக்கு இரட்சணியம் அளிக்க வல்லதென்றும், குருப்பட்டமோ, ஆயா் அபிஷேகமோ இரட்சணிய மளிப்பதில்லை என்றும் உணரவேண்டும்.

புனித அகுஸ்தினார் ஆயராக இருந்த பொழுது தமது மக்களை பார்த்து கூறுவார் - நான் உங்களது ஆயர். அந்த பொறுப்பை நினைக்கும் போது நான் பயப்படுகின்றேன். ஆனால் நான் உங்க ளோடு ஒரு கிறிஸ்தவன். அதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். ஏனெனில் கிறிஸ்தவனாகவே நான் இரட்சணியம் பெறுவேன்.

ஆகையினால் வத்திக்கான் சங்கம் குருகுலம்- இறைகுலம் என்ற பிரிவினைத் தலைப்புக்களைத் தவிர்த்து, அநேகமாகத் திருப் பணியாளர்- பொதுநிலையினர் என்ற பிரிவுபடுத்தலையே விரும்பு கின்றது. இப் பிரிவுபடுத்தல் இறை மக்களுக்கு இடையிலுள்ள அடிப்படையான சமத்துவத்திற்கோ, சகோதரத்துவத்திற்கோ, மாண் பிற்கோ, மகத்துவத்திற்கோ முரணாகாது செயற்பட வேண்டும். இதன் காரணமாக திருப்பணியாளரின் அமைப்பு (Hierarchical Structure) ஒரு பிரமிட்டின் உருவத்திலே (Pyramidal structure)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது பாப்பரசர் உச்சியிலும், அதன்கீழ் படிப்படியாகக் கருதி னால் மார், பேராயர்கள், ஆயர்கள், குருக்கள் மக்கள் என்ற ஒழுங்கில் இயங்காது – திரு பணியாளருக்கும், பொதுநிலையின ருக்கும் இடையில், தொடர்புகள் குழுமப்பண்பு (Collegial) நிறைந்த பொது மைய வட்டங்களாக (Concentric circles) இயங்க வேண்டு மெனச் சங்கம் விரும்புகின்றது. அதாவது கிறிஸ்துவை மைய மாகக் கொண்ட திருச்சபையிலே பாப்பரசரைச் சுற்றி ஆயர்களும், ஆயர்க ளைச் சுற்றி குருக்களும் குருக்களைச் சுற்றி மக்களும் கூடிவாழ்ந்து செயல்பட வேண்டும். (Community – Collegiality – Co-responsibility- co- operation).

மேற்கூறப்பட்ட புரட்சியின் அடிப்படையில் பொது நிலையினரின் முழுமையான வரைவிலக்கணத்தை அடைவதற்கு ஏதுவான அடிப்படையான சில அம்சங்களை சங்க ஏடுகளிலிருந்து தேர்ந் தெடுக்கலாம். திருச்சபையின் சிறுபான்மையான திருப்பணியாளர் களை மையமாக வைத்து பெரும்பான்மையான பொதுநிலையினரின் தன்மையையும், சாரம்சத்தையும் (Nature and Essence) வர்ணிப் பது தலைகீழான ஒரு சீரற்ற ஒழுங்கைப் பின்பற்றுவது ஆகும்.

பொதுநிலையினர் தங்கள் மட்டிலும், திருஅவைக்கு வெளியே யுள்ளவர்களைச் சார்ந்த மட்டிலும், இவர்கள் யார்? அவர்களுடைய கிறிஸ்தவ ஆள்தன்மையை (Christian per-sonality) அமைக்கும் அம்சங்கள் யாவை?

2 ஆம் வத்திக்கான் சங்கம் பொதுநிலையினரின் வரைவிலக் கணத்தை வகுத்துக் கொடுக்கவில்லை. ஆனால் அதற்குரிய அம்சங் களைத் 'திருஅவை, இன்றைய உலகில் திருஅவை பொதுநிலை யினரின் அப்போஸ்தலத்துவம், திருச்சபையின் மறைபரப்புப் பணி' போன்ற ஏடுகளில் பரவலாக ஆனால் தெளி வாக கொடுத்திருக்கின்றது. அவைகளில் நான்கு முக்கிய மானவற்றை இங்கு காண்போம்.

### 3.2 பொதுநிலையினர் திருஅவையில் உரிமையும், கடமையும் கொண்ட முழுமையான அங்கத்தவர்கள் (Full-fledged members with rights and duties)

புதிய ஏற்பாட்டின் இறைமக்கள் என்றழைக்கப்படும் திருஅவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினுள்ளே வகுப்பு வாதத்திற்கு இடமில்லை. திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவின் மரணத்திலும், உயிர்ப்பிலும் பங்கெடுத்து உதித்த கிறிஸ்தவர்கள் எல்லோரும், ஒரே பரம பிதாவின் பிள்ளைகள், ஒரே மறையுடலின் அங்கத்தவர்கள். ஆவியின் உறுதிப்படுத்தலின் வழியாக முதிர்ச்சியடையும் இவர்கள் தங்கள் உரிமைகளையும், கடமைகளையும் எந்த காரணத்தினாலோ எவருடைய ஆதிக்கத்திற்காகவோ மறைக்கவோ மறுக்கவோ முடியாது. உரிமையில் குறைந்த இரண்டாந்தர கிறிஸ்தவர்களாகவோ, கடமையில் குறைந்த முக்கியத்துவம் அற்றவர்களாகவோ கருதுவது தவறு.

முழுமையான அங்கத்துவர்கள் என்ற மட்டில் இறைவனின் வார்த்தையைப் போதியளவு கேட்கவும், இறைவனின் அருட் சாதனங்களை அடிக்கடி கொண்டாடி ஊட்டமும் உறுதியும் பெறவும், திருச்சபை நலனுக்காகத் தமது ஆலோசனையைக் கூறவும் இவர்களுக்கு உரிமையுண்டு (தி.அ: 37). இந்த உரிமைகள். தெய்வீக திட்டத்தில் பிறந்த உரிமைகள் (Divine right) ஆகையால் இவைகளை திரு அவை சரித்திரத்திலே, திருப்பணியாளர்கள் மேல் திணிக்கப்படும் கோட்பாடுகளின் (Ecclesiastical Laws) காரணமாகவோ, தனித் தலைவர்களின் அதிகாரத்தினாலோ, மறுக்க முடியாது.

இக்கண்ணோட்டத்தின் படி பொதுநிலையினரின் அருட்சாதன தேவைகளைத் திருஆட்சியாளரின் விருப்பத்திற்கும், இணக்கத்திற்கும் விட்டுவிடாது திரு உரிமைகளைப் பூர்த்திசெய்யத் திரு அவையின் கோட்பாடுகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். மேய்ப்பர்கள் மக்களின் உரிமையான கோரிக்கைகளுக்கு நன்கு செவிமடுக்க வேண்டும். உதாரணமாக கிராமங்களிலும், நகரத்தின் வெளிப்புறங்களிலும் பரந்து கிடக்கும் சிறிய கிறிஸ்தவ சமுகங்களும் தமக்குரிமையான சேவைகளைப் பெறவேண்டும். பட்டணத் திரு அவைகள் பலவிதமான அருட்சாதனங்களையும், சேவைகளையும், வழிபாடுகளையும் பெற்றுப்பலுகி வளரும் அதேநேரத்தில் சிறிய கிறிஸ்தவ சமூகங்கள், தொகையில் சிறியனவென்றும், தூரத்தில் எட்டாதவைகளென்றும் காரணங்காட்டி இறைவனின் வார்த்தையின்றி, வழிபாடின்றி, நற்கருணை உணவின்றி, சமூக உறவுமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடி வதங்கிவிடுவது அநீதி. மனிதனாய் பிறந்தவ னுக்கு உணவு உடை உறைவிடம் - இவை மூன்றும் மனித உரிமைகள். அதேபோல் கிறிஸ்தவனாக பிறந்த ஒவ்வருவனுக்கும் போதிய அளவு வார்த்தை யும் நற்கருணையும் உணவாக பெற உரிமை இருக்கின்றது.

பொதுநிலையினர் உரிமைகள் மாத்திரமல்ல கடமைகளும் பல உடையவர்களாக இருக்கின்றனர். கடமையும், உரிமையும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் அல்லது இருமுகங்கள் உழைக்கிற வனுக்கே உண்ணவும் உரிமையுண்டு. அதேவிதத்தில் உரிமை களை வாதாடி வாங்கினால் போதாது. பொதுநிலையினர் திரு அவையில் முக்கியமான கடமைகளையும் பொறுப்புகளையும் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, முதிர்ச்சியுடனும் பொறுப்பு உணர்ச்சியுடனும் செயற்படவேண்டும்.

கடந்த காலத்தில் திரு ஆட்சியமைப்பே உருவாகக் கொண்ட திருஅவை இயலில் (Hierarchology as Ecclesiology) பொது நிலை யினரின் இடம் ஆட்சியாளருக்கு அக்கமும், பக்கமும் நிற்பதி லேயே தங்கியிருந்தது. இறைவனின் பணிசெய்ய கிறிஸ்து வந்தாரென்றும், கிறிஸ்வின் பணியைசெய்யத் திருப்பணியாளர்கள் திருநிலைப் படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்றும், பொதுநிலையினர் திருநிலைப்படுத்தப்பட்ட பணியாளரின் (Ordained Ministers Bishops and Priests) பணியிலே அணைதுணை (Marginal) பங்கெடுக் கலாமென்றும் நம்பப்பட்டது. இதற்கிணங்க பொதுநிலை அப்போஸ் தலத்துவர் (lay apostles) ஆயர் , குருக்களுக்கே உரித்தான பணியில் கையாட்களாகவும் கருவிகளாகவும் கணிக்கப்பட்டனர். பொதுநிலை அப்போஸ்தலத்துவம் பொலிந்த காலத்திலே (1940-1960) இவர்கள் ஆயர்- குருக்களின் கரங்களாகவும், பாதங்களா கவும் இருப்பதில் மேன்மை கொள்ள வேண்டுமென்று போதிக் கப்பட்டது. இது தவறு.

2 ஆம் வத்திக்கான் சங்கம் இக்கொள்கையைத் தகர்த்தெறி கின்றது. பொதுநிலையினர் திரு அவையினுள் இருப்பதற்கும், இயங்குவதற்கும் இன்னோர் பகுதியின் தயவும், தாராள மனதும் நிபந்தனையல்ல. தங்களுக்குரிமையான திருமுழுக்கு, ஆவியின் உறுதிப்படுத்தல், திருமணம் போன்ற அருட்சாதனங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தளமாகக் கொண்டிருக்கவும், இயங்கவும் அவர்களுக்கு உரிமையும், கடமையும் உண்டு. மேலும் கிறிஸ்துவின் இரட்சணியப் பணி திரு அவை முழுவதன் மேலும் சுமத்தப்பட்டுள்ள ஒரு பொறுப்பு. இப்பொறுப்பை அல்லது அப்போஸ்தலிக்க கடமையை ஆவியால் உறுதிப்படுத்தப்பட்டோரும், திருநிலைப்படுத்தப்பட்டோரும், இல்லறத்தோரும், துறவறத்தோரும் தமக்கேற்ற வடிவத்திலும், வட்டாரத்திலும் நிறைவேற்றக் கடமைபட்டிருக்கின்றனர். (தி.அ. 32a, b)

சேவைகளைப் பொறுத்தமட்டில் மாத்திரமல்ல, திரு அவையின் வாழ்விற்கு ஏதுவான சகல காரியங்களிலும், சுதந்திரத்தோடும், உரிமையோடும், கருத்துக்களைக் தெரிவிக்கவும், தவறுகளைக் கண்டிக்கவும், நன்மையானவற்றை முன்னோக்கி எடுத்துச் செல்லவும் கடமைப்பட்டிருக்கின்றனர். (தி.அ. 32) திரு அவையினுள்ளே பொறுப்புள்ளவர், பொறுப்பற்றவர் அல்லது முக்கியத்துவமுள்ளவர், முக்கியத்துவமற்றவர், அல்லது உயர்ந்த மனிதர் தாழ்ந்த மனிதர் அல்லது உரிமை கூடியவர் குறைந்தவரென்றும் வகுப்புக்கள் கிடையாது.

பொதுநிலையினர் தமக்குரிய இலக்கணத்தையும், இடத்தையும், உரிமையையும், கடமையையும் கண்டடையவும் நிறைவேற்றவும் திருநிலைப்படுத்தப்பட்ட பணியாளர் வழிவிட்டு, ஒளிகொடுத்து ஊக்கம் கொடுத்து உதவ வேண்டும் (தி.அ.33d). பொதுநிலையினர் திரு அவையில் உண்மையான உருவத்தையும் உரிமையான பங்கையும் எடுக்க, ஆயர்களும் குருக்களும் போதனையில் நின்றுவிடாது, சாதனையில், வரவேற்று வழிகாட்டி, இடம் கொடுத்து நல் நம்பிக்கை ஊட்டிப் பொறுப்பைப் பகிர்ந்து செய்ய வேண்டியன பல.

**3.3 பொதுநிலையினர் புதிய இறைமக்கள் என்பதின் காரணமாகக் கிறிஸ்துவின் குருத்துவ, இறைவாக்கு, அரச பணிகளின் பங்காளிகளாக இயங்குகின்றனர்.** (Participants in the Priestly, Prophetic and Royal Functions Christ)

திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவின் சாயலைப்பெற்று ஒவ்வொருவரும் கிறிஸ்து இரட்சகரின் முப்பணியில் (triple Messianic functions) பங்கு பெறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.31 பொது நிலையினரின் பொது குருத்துவம்

(Common Priesthood of Christ)

கிறிஸ்து குருவாக இயங்கினார். பொதுநிலையினர் எல்லோரும் அவரைப்போன்ற குருக்களல்ல. ஆனால் கிறிஸ்துவின் குருத்துவ பணியின் சாயல் பொதுநிலையினரை சாருகின்றது.

இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் உறவை மீண்டெடுத்து, இறைவனை மனிதனுக்கு வெளிப்படுத்தவும், மனிதனின் தேவை களை இறைவன் முன் வேண்டவும் கிறிஸ்து மத்தியஸ்த குருவாக இயங்கினார். அதே வரிசையில் பொதுநிலையினர் தாம் பெற்ற இறை வார்த்தையையும் வரத்தையும் உலகிற்கு வழங்கவும், உலகின் தேவைகளையும் பிரச்சனைகளையும் இறைவன் முன் சமர்ப்பித்து வேண்டவும் மத்தியஸ்த குருத்துவ பணியை (Mediatory Priesthood) ஏற்றிருக்கின்றனர்.

இறைமக்கள் முழுவதும் ஒரே குருகுலம் என்பது அண்மை யில் 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின் கண்டெடுக்கப்பட்ட ஒரு புதிய அம்சமல்ல. மார்டின் லூதருடன் சேர்ந்தவர்கள் பணிக் குருத் துவத்தை தாங்கி இப்பொதுக் குருத்துவத்தைத் திரு ஆட்சிக் கெதிராக ஒரு பிரசாரத் தலைப்பாக (Anti hireachical banner) உயர்த்தியதன் காரணமாக, திருச்சபை பொதுநிலையினரின் பொதுக்குருத்துவத்தைப் பற்றிப் பேச முன்வரவில்லை. பிரசாரத் தலைப்பாகத் தூக்கியவர்களும் இத்தலைப்பின் உள்ளடக்கத்தை வளர்க்கவில்லை. ஆனால் இன்று திரு அவை பொதுக்குருத்து வத்தை போரற்ற மனப்பான்மையுடன் (Non – polemic attitude) நோக்கும் பொழுது, பொதுநிலையினரின் குருத்துவத்தின் தன்மையை யும் பணியையும் கருத்துடன் வளரும் ஓர் அம்சமாகவும் பணிக் குருத்துவத்துடன் அடித்தளத்தில் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட் டதுமாக கருதுகின்றது. (தி.அ. 10b)

புனித இராயப்பர் ஆதிக் கிறிஸ்தவர்களைப் பார்த்து 'நீங்கள் ஞானப்பலி நிறைவேற்றும் குருத்துவத் திருக்கூட்டம்' (1 இரா 2:5) என்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவத் திருக்கூட்டம் (1 இரா. 2:9) என்று கூறுவதை ஆதாரமாகக் கொண்டு, இன்றைய திருச்சபை பொதுநிலையினரை குருத்துவ குலமென்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருத்துவ பணிபுரிய உரிமையும், கடமையும் உள்ளோர் என்றும் கூறுவதை வெறும் ஆறுதல் வார்த்தைகளாகவோ போதனை முழக்கங்களாகவோ எடுக்காது, கருத்து நிறைந்த உண்மையாகக் கருதி அதைச் செயல்படுத்த வழிவகுக்க வேண்டும்.

பொதுநிலையினர் தமது குருத்துவ பணியை வழிபாடு, அருட் சாதனம், திருப்பலி விருந்து இவைகளில் பங்கெடுப்பதற்கு ஆதாரமான அடித்தளமாகவும், இறைவனுக்கும் உலகத்திற்கு மிடையில் புரிய வேண்டிய இணைப்புப் பணியின் காரணமாக உணரவேண்டும்.

### 3.32 கிறிஸ்து இறைவாக்கினர் (Prophetic Mission of Christ)

அதேவிதமாகக் கிறிஸ்து இறைவாக்கினராக, உண்மைக்குச் சொல்லிலும் செயலிலும் சாட்சி பகர்ந்தார் என்பதன் காரணமாக, பொதுநிலையினர் உண்மைக்காக விசேடமாக மனிதனைப்பற்றி தேவனால் வெளிப்படுத்தப்பட்ட உண்மைக்காக சொல்லாலும் செயலாலும் சாட்சியம் கொடுக்க கடமைப்பட்டிருக்கின்றனர். மனத் துணிவுடன் உண்மையைப் பேசவும் அநீதியைக் கண்டிக்கவும் மனித உரிமைகளுக்காக போராடவும் பொதுநிலையினர் தனியாகவும் குழுவாகவும் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆகவே அக்கிரமம், அநீதி, அடக்கு முறை எவ்விதத்திலும் எவ்விடத்திலும் தலைகாட்டினும், அவைகளை கிறிஸ்தவத்திற்குப் புறம்பான அரசியல், பொருளாதார, சமூக பிரச்சனைகளென்றும் தவிர்த்து நடப்பது முறையல்ல. (ஜெரிக்கோ வீதியில் விழுந்தவனை விலத்திச்சென்ற மதகுரு போலாகின்றோம்).

### 3.33 கிறிஸ்து அரசன் (Kingly Function of Christ)

கிறிஸ்து அரசனாக புதிய இறையரசின் தலைவனாக செயற்பட்டார். வார்த்தையாலும் வாழ்வாலும் புதிய இறையரசை அறிவித்து அவ்வரசுக்குரிய அன்பு, நீதி சாந்தி, இரக்கம், புதிய வாழ்வு இவை களைத் தமது புதுமையினாலும், உயிர்ப்பினாலும் அடியிட்டார். அவருடன் மரித்து புதிய வாழ்விற்குப் பிறந்த கிறிஸ்த வர்களும் ஒரு நல்ல அரசனைப்போல, அதாவது மக்கள் நலத்தையே தலைமேற் சுமந்த கடனாக் கொண்டவர்களாக வாழ்க்கையின் எல்லா வட்டாரங்களிலும் புதிய இறையரசின் பெறுமதிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Values of the Kingdom) நிலைநாட்ட உழைக்க வேண்டும்.

**3.4 பொதுநிலையினர் உலகத்தை சேர்ந்தவர்களாகவும் உலகத்தில் ஈடுபட்டிருப்பவர்களாகவும் உலகத்தின் பொறுப்புடைய வர்களாகவும் செயற்பட வேண்டும்.**

(Secularity is the Specific character and responsibility of the laity)

திரு அவை உலகத்திலும், உலகத்திற்காகவும் ஏற்படுத்தப்பட் டது என்று மேற்கூறிய தத்துவத்தின்படி கிறிஸ்தவர்கள் சிறப்பாக முழுமையான உலகிலே வாழும் பொதுநிலையினர், உலகத்தை யும் அதன் வெவ்வேறு அம்சங்களையும் மீட்கும் சேவையில் ஈடு பட்டிருக்கிறார்கள். உலகம் எனும் வார்த்தையை நாம் பல விதத்தில் பாவம் அல்லது தீயது எனும் வார்த்தையுடன் தவறாக மாற்றி எடுத்துவிட்டோம்.

உலகம் பாவம் நிறைந்த சாத்தானின் இராச்சியம், குடும்ப வாழ்வு சுய அடக்கமற்ற மனிதர் சீவிக்கும் வழி, பாலுணர்ச்சிகள், இயற்கை யின் அழிவு உணர்ச்சிகள், உலகை விட்டோடுவதும், குடும்பத்தைத் தவிர்ப்பதும், பாலுணர்ச்சிகளை ஒடுக்குவதும், மடத்திற்குள்ளே புகுவதும் இவைகளே 5ம் 6ம் நுற்றாண்டுகளில் திருச்சபையிலும் முன்னெடுக்கப்பட்ட மிக பிழையான போதனைகள் இதை மனிக்கேயிசம் (Manichersm) என்போம். இதன் படி குருக்கள் துறவிகள் அல்லாதவர்களை பெலவீனம் நிறைந்த இரண்டாந்தர கிறிஸ்தவராகக் கருதினோம். இதற்கிணங்க பொதுநிலையினரும் தாம் தரத்தில், பொறுப்பில், ஒழுக்கத்தில், பரித்தியாகத்தில் குறைந்த இரண்டாந்தர கிறிஸ்தவர்களாகத் தம்மை கருதினர். இது தவறு. எனவே இந்நிலை மாறவேண்டும்.

உலகம் நல்லது - இறைவனின் படைப்பு. குடும்பம் - நல்லது இறைவனின் சமூக அமைப்பு. பாலுணர்ச்சி தன்னும் நல்லது — மனித அன்பின் உயர்ந்த உணர்ச்சி. இவைகளை மறுப்பதிலும் தவிர்ப்பதிலும்தான் கிறிஸ்தவம் தங்கவில்லை. இவைகளை இறைவனின் இரட்சணிய திட்டத்திற் கேற்ப அமைப்பதிலும் ஒழுங்குபடுத்துவதிலும், இவைகளை மீட்டெடுத்து 'புதிய மனித குலத்தையும் புதிய மண்ணையும் புதிய விண்ணையும்' வளர்ப்பதி லும் தளர்ச்சியடையாது உழைப்பதிலும் தங்கியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தி.அ.39b) இதற்கிணங்க உலகம், மனித சமூகம், குடும்பம், திருமண அன்பு, இவைகளைப்பற்றியும் சமூக, அரசியல், பொருளா தார வாழ்வு, பற்றியும் திருச்சபை முன்பொருபொழுதும் இல்லாத முறையில் இன்று கற்பிக்கின்றது. இவைகளையெல்லாம் திரு அவை இன்றைய உலகில் புரிய வேண்டிய முக்கிய பணியாக உணரும் பொழுது, பொதுநிலையினரின் பணி அவர்களுடைய சொந்த உலகில் அதிகரிக்கின்றது. உலகமே அவர்களின் வாழ் விடமும் பணிக்களமும். ஆகையால் இப் பணியைப் புரிவதில் இவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டவர்களின் பதிலாளிகளாகவோ, பிரதிநிதிக ளாகவோ அல்லது துணைவர்களாகவோ செயற்படாது, தாங்களும் திருமுழுக்கினாலும் உறுதிப்படுத்தலினாலும் கிறிஸ்து வின் பணியை ஏற்ற முதிர்ச்சியான அங்கத்தவர்களென்ற மட்டில் தம் சொந்த பொறுப்புணர்ச்சியுடன் உலகில் செயற்பட வேண்டும்.

ஜேர்மன் இறையியலாளர் கார்ல் ரானர் (Karl Rahner) கண்ணோட் டத்தில், பொதுநிலையினர் தங்கள் கிறிஸ்தவ வாழ்வையும் கடமைகளையும் உலக அனுபவத்தினாலும் உலக வாழ்வினாலும் தீர்மானிக்க கடமைப்பட்டிருக்கின்றனர். ஒரு கிறிஸ்தவனுக்கு இருந்து வரும் பணியை ஈடுபடுத்தலை அவனுடைய உலக சூழ லாலும் அங்கே நடக்கின்றவைகள் பொருந்திய வாழ்விலும் உருவெடுக்க செய்கின்றன. (One whose Christian experience and responsibilities are determined by his native involvement in the life and organisation of the world (NRT 78 1956, pp 4 – 32)

இக்கண்ணோட்டம் டீற்றிக் பொன்கொவ்வர் (Dietrich Bonhoeffer), போல் வான் பூறன் (Panl Van Buren) இவர்களின் கருத்துடன் சேர்ந்தது.

உலகத்தையும் மனுக்குலத்தையும் மையமாகக் கொண்டு சேவையில் சுற்றும் திருச்சபையின் பொதுநிலையினர் இனிமேல் ஸ்தாபன திருஅவையையோ, குருகுலத்தையோ பீடத்தையோ மாத்திரம் மையமாகக் கொண்டிருக்க முடியாது. திருவழிபாடு மையமாகவும், குருக்கள் தலைவர்களாகவும் இருந்தபொழுதிலும், பொதுநிலையினரின் முக்கிய பணி இவ்வுலகத்தையும் அதன் மனுக்குல வாழ்வையும் கிறிஸ்தவ தத்துவங்களுடன் கட்டியெழுப்பு வதே. பொன்கொவ்வர் கூறுகிறார் பொதுநிலையினர் உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியங்களில் ஈடுபடும்பொழுது அங்கே திருஅவையின் பெயரைப் பாதுகாக்கவல்ல, ஆனால் கிறிஸ்துவுடன் ஒன்றித்து விடுதலை தேடும் சகல மனிதர்களாகவும் சகல வாழ்க்கை வட்டாரங்களுக் காகவுமே செயல்படுகின்றனர்.

**3.5 பொதுநிலையினர் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக உண்மையான அருங்கொடைகளைப் பெற்றவர்கள்.** (Lay Charisms and Ministries)

அருங்கொடைகள் தனியாரின் நலனுக்காக ஒருவருக்கு (Privately) ஆவியினால் அளிக்கப்படும் கொடையல்ல. ஆனால் சமூகத்தின் நலனுக்காக, சமூகத்தை வளர்ப்பதற்காக ஒருவருக்கு கொடுக்கப்பட்ட கொடை. (for the benefit of the community). இப்பேர்ப்பட்ட கொடைகள் ஆதித்திருச்சபையில் அதிகமாக இருந் தன. அக்கொடைகள் நிலை நிற்கும் நிரந்தர சேவைகளாகவும் (Services Ministries) வளர்ந்தன. ஆனால் திருச்சபையின் நீண்ட சரித்திரத்தில், இவைகள் திரு நிலை படுத்தப்பட்டோரின் கொடைக ளாக (latin theology educated clergy) மாத்திரம் தவறாகக் கருதப்பட்டன.

ஆனால் 2 ஆம் வத்திக்கான் சங்கம் இத் தவறான அபிப்பி ராயத்தைத் திருத்தியது. ஆவியானவர் எல்லா நிலையிலுள்ள விசு வாசிகளுக்கும் தமது விருப்பம்போல் சிறப்பான அருங்கொடை களை வழங்குகின்றா ரென்றும், அக்கொடைகள் பொதுநிலையினர பல்வேறு அலுவல்களையும் கடமைகளையும் மேற்கொள்ள தகுதியும் ஆர்வமும் அளிக்கின்றதென்றும் கற்பிக்கின்றது. (தி.அ.12b) இக்கொடைகளை ஆயர்கள், குருக்கள் இலேசாக நசுக்கிவிடாது உண்மையானவற்றை ஊக்குவித்து தேர்ந்து மனதார நன்றியுடன் வரவேற்று வளர்த்து பயன்படுத்த வேண்டும். (தி.அ. 12b,c.A.A.3 c).

விசேடமாக திருநிலைப்படுத்தப்பட்டோர், துறவிகள் குறைந்து கொண்டு பணிகள் அதிகரித்து கொண்டு போகும் இன்றைய நிலையில், பொதுநிலையினரின் அருங்கொடைகளை விழிப்புடன் தேர்ந்தெடுத்து ஆர்வத்துடன் பயன்படுத்துவது அவசியம். இதற் கிணங்க பொதுநிலையினர் வெட்கம் தகுதியின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித்தராதரம் இவைகளை ஒதுக்கி தாம் பெற்ற அருங்கொடைகளைச் சமூக வளர்ச்சிக்குப் பயன்படுத்தப் பல்வேறு பொறுப்புக்களையும் துணிவு டன் கையேற்க முன்வர வேண்டும். எல்லா வழிபாட்டிற்கும், எல்லா பங்கு வைபவங்களுக்கும், எல்லா மறைநிகழ்ச்சிகளுக்கும், எல்லா சமூக சம்பவங்களுக்கும், திருநிலைப்படுத்தப்பட்ட குரு அல்லது ஒரு துறவி இருக்க வேண்டும், இவர்களே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டுமென்ற கண்ணோட்டம் எம்மத்தியிலிருந்து மறைய வேண்டும். மறையாசிரியர்கள், சமூகத்தலைவர்கள், செபத்தலை வர்கள், போதகர்கள், அபிவிருத்தித் தலைவர்கள், வாலிபர் இயக் குனர்.... இப்படியாக அருங்கொடை பெற்றவர் அநேகர் எம்மத்தியில் செயற்பட வேண்டிய காலம் இது. ஆதித் திருஅவைகளில் விசேடமாக சின்னப்பர் அடியிட்ட குழுமங்களில் அநேக உடன-பணியாளர்கள் (as many as 24 co-workers with Paul) பணிபுரிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரம் 4

## பொதுநிலையினரின் வாழ்வும் பணியும்

இப்படியாகப் பொதுநிலையினர் உரிமையும் கடமையும் கொண்ட முழு அங்கத்தவரென்றும், கிறிஸ்துவின் முப்பணியின் பங்காளிக ளென்றும், அருங்கொடை பெற்று உலகிலே உரிமையுடன் செயற்படு கிறவர்களென்றும் 2ஆம் வத்திக்கான் சங்கப் படிப்பினையில் வரைவிலக்கணம் அமைக்கின்றோம்.

இப்படிச் சிந்தித்து செயற்படுவது பொதுநிலையினரின் அப்போஸ் தலத்துவம், திருப்பணிகள், ஆன்மவாழ்வு (Lay Apostolate Ministry Spirituality) இவைகளில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும். அத்திருப்பங்களை இவ்விடம் விரிவாக ஆராய முடியாது. ஆகையால் இவைகளை விருத்தி செய்ய சுருங்கச் சிலவற்றை சுட்டிக்காட்டுவோம்.

### 4.1 பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம்.(Lay Apostolate)

திருஅவை தனது இரட்சணிய பணியை நடைமுறையில் நிறை வேற்ற செய்யும் அலுவல் அனைத்தும் அப்போஸ்தலத்துவம் எனப்படும். ஒரே இரட்சகர் தம் பணியை முழுத்திருச்சபையிடம் ஒப்படைத்தார். இப்பணி மறைபரப்புதல், புனிதப்படுத்துதல், உலகை ஒழுங்குபடுத்து தல் ( Evangelistion, Sanctification, perfection of the temporal order) என்று பல்வேறு அம்சங்களாக பிரித்தெடுப் பினும் முழுப்பணியும் திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திருச்சபைக்குள்ளே குறிக்கப்பட்ட ஒரு குழுவிடம் மாத்திரம் ஒப்படைக் கப்படவில்லை. உலகை மீட்கும் பணியாகிய திருச்சபையின் அலுவல் (அப்போஸ்தலத்துவம்) முழுவதையும் தாங்கள் மட்டுமே தனிமையில் செய்து முடிக்கத் தங்களை கிறிஸ்து நியமிக்க வில்லை என்று (திருப்பணியாளர) அறிவர். (தி.அ.30a)

ஆகவே ஒரே இரட்சணிய பணி முழுத்திருச்சபையின் அப்போஸ் தலத்துவமாக நடைமுறையில் அலுவல் காரணமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.

கடந்த காலத்தில் திருப்பணியாளர்களிடம் நேராக ஒப்படைக் கப்பட்ட பணியிலே பங்கெடுப்பதே பொது நிலையினரின் அப்போஸ் தலத்துவம் ஆகக் கருதப்பட்டது. இது தவறு. கிறிஸ்துவின் இரட்சணியபணி முழுத்திருஅவையிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இப்பணிக்கு எல்லா கிறிஸ்தவர்களும் திருமுழுக்கு, திடப்படுத்தல் வழியாக ஆண்டவரினால் அதிகாரத்துடன் நேராக அழைக்கபடுகின்றனர். (தி.அ.33b) பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம் திரு ஆட்சி அமைப்பாளரின் அழைத்தலிலோ, அதிகாரத்திலோ அல்ல ஆண்டவரின் அதிகாரத்திலே பிறக்கின்றது.

மேற்கூறிய தப்பபிப்பிராயத்தின் காரணமாக பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம் திருநிலைப்படுத்தப்பட்டோரின் அக்க பக்க பணியாக மாத்திரமே இருந்தது. 2 ஆம் உலக யுத்தத்தின் பின் ஐரோப்பாவில் மிக மும்முரமாக எழுந்த சில பொதுநிலையினர் இயக்கங்களின் (Catholic Action ) காரணமாகவும் 13-ம் சிங்காராயர் தொட்டு 12-ம் பத்திநாதர் வரை படிப்படியாக முதிர்ச்சியடைந்த சிந்தனைகளினாலும் பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம் 2ஆம் வத்திக்கான் சங்கத்தில் ஒரு முக்கிய திருப்பத்தைக் கண்டிருக்கின்றது. திருநிலைப்படுத்தப்பட்டவர் தம் நிலைக்கேற்ப திருச்சபையின் அப்போஸ்தலத்துவத்தில் ஒரு பணியைப் புரிவது போல், பொதுநிலையினரும் தம் நிலைக்கேற்ப (Secularity) ஒரு பணியைப் புரிகின்றனர்.

**கிறிஸ்துவின் இரட்சணியப் பணி (Mission of Christ)**

↓

**திருச்சபையின் இரட்சணியப்பணி, அப்போஸ்தலத் துவம் (Mission of Church)**

↓

**திரு ஆட்சி அமைப்பாளரின் அப்போஸ்தலத்துவம் (Ap Of Hierarchy)**

↓

**ஆயர்**

**குருக்கள்**

**தியாக்கோன்கள்**

**பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம்( Ap. Of Laity)**

↓

**தனிப்பட்ட பகிரங்க சேவை (Lay Ministry)**

**கத்தோலிக்க சேவை**

**அடியிடப்பட்ட சபைகள் (மரியாயின்சேனை)**

**குடும்பம்**

**தனிப்பட்ட அப்போஸ்தலத்துவம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலத்தில் மரியாயின் சேனை, கிறிஸ்தவ தொழிலாளர், மாணவர் இயக்கங்கள், புனித வின்சென்டிபோல் சபை இவைகளின் சேவை பங்கின் எல்லைகட்குள்ளே குருக்களின் ஏவுதலிலும் வழிநடத்தலிலும் தங்கி ஆக்கத்தன்மை (Creativity) இயக்காற்றல் (Dynamism) இல்லாதவையாகவும் நடந்தன. ஆகையால் பொதுநிலையினரைப் பற்றியும் உலகம் - திருச்சபை தொடர்பு பற்றியும் மேற்கூறிய சிந்தனைகளுக்கிணங்க பொது நிலையினரின் ஆக்க வன்மையை (Initiatives) ஆதாரமாகவும் வைத்து பலவிதத்தில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

**4.2 பொதுநிலைத் திருப்பணி** (Lay Ministry)

கடந்த காலத்தில் திருநிலைப்படுத்தப்பட்ட பணியாளர்களே (Ordained Ministers) திரு அவையின் பணியாளர்களாகக் கருதப்பட்டனர். ஆயர்கள், குருக்கள் (தியாக்கோன்) இவர்களே திருச்சபையில் நிலையான முழுமையான சேவையாளராகக் கருதப்பட்டு திருப்பணி யாளர் எல்லோரும் திருஆட்சி அமைப்பின் (Hierarchy) அங்கத்த வர்களாக் கருதப்பட்டனர். ஆனால் இப்போது விவிலிய ஆராட்சியின் அடிப்படையில் திருப்பணியாளரின் வரைவிலக்கணம் மாற்றி அமைக்கப்படுகின்றது. திரு அவையின் நிலையான பகிரங்க சேவை புரிபவர் திருப்பணியாளர் ஆவார். இவர்களே திருநிலைப்படுத்தப்பட்ட திருப்பணியாளரென்றும் பொதுநிலைத் திருப்பணியாளரென்றும் பிரிக்கப்படுகின்றனர்.

இரு வகை திருப்பணியாளர் -

**1. திருநிலைபடுத்தப்பட்ட திருப்பணியாளர்.** (Ordained Ministers)

**2. பொதுநிலைத் திருப்பணியாளர்** (Lay Ministers)

2ம் வத்திக்கான் சங்கம் ஆயர்களைப் பற்றி ஆராய்வதற்கு முன் 'ஆண்டவர் கிறிஸ்து இறைமக்களை ஊட்டி வளர்ப்பதற்காகவும் என்றும் அவர்கள் பெருகுவதற்காகவும் தமது திருஅவையிலே பல்வேறுபட்ட பணிகளை ஏற்படுத்தினார்" (தி.அ.108a) என்கின்றது. பொது நிலைத்திருப்பணியாளர் (திருநிலைப்படுத்தப் படாத–Non ordained) பற்றிய பேச்சு சங்க ஏடுகளில் நேரடியாக இடம் பெறாவிடினும், விவிலிய ஆராய்ச்சிக்கும், சங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பினைகளுக்கும் பிரமாணிக்கமாக வளர்ந்து வரும் இறையியலில் (Post Vatican Biblical Thelogy) பொது நிலையினரின் திரு அவை பற்றிய விளக்கம் தெளிவாகின்றது. பொதுநிலையினர் பொதுநிலையினராகவே உலகத்தில் இருந்து கொண்டு தமது திருமுழுக்கு திடப்படுத்துதல் அருட்சாதனங்களின் வல்லமையில் திருச்சபையின் பேரில் பகிரங்கமாகவும், நிலையாகவும் (Stable) கையேற்கும் பணி பொதுநிலைத் திருப்பணியாகும். இத்திருப்பணிக்குத் திருநிலைப்படுத்தல் சாரமாகவோ நிபந்தனையாகவோ அமையாது.

வருங்கால திருஅவையில் கிறிஸ்தவ சமூகங்கள் ஒவ்வொன்றும் திருநிலைப்படுத்தப்பட்ட திருப்பணியாளர்களை மாத்திரம் தனித் தலைவர்களாக கொண்டு இயங்க முடியாது. எல்லா சமூகங்களிலும் அருங்கொடைகள் (Charisms) வரவேற்கப்பட்டு சமூகத்திற்கு இன்றியமையாத சில திருப்பணியாக (Ministry) ஏற்றக் கொள்ளப்படும். பொதுநிலையினர் ஆண்களும் - பெண்களும் சமூகத் தலைவர் களுமாக (Community Leaders) மறை ஆசிரியராக வும் (Lay Catechists) செபத் தலைவர்களாகவும் (Prayer Leaders) சுகாதார, சமூக, தொழில் சேவையாளராகவும் (Sanitary, Social, Work Leaders) திருப்பணி ஏற்பார்கள். இவ்வமைப்பில் குருக்கள் வட்டாரத் தலைவர்களாகவும், (Regional Leaders) கூட்டமைப் பாளர்களாகவும் (Co- Ordirators), திருப்பலிவிருந்தின் தலைவர்களா கவும் (Eucharistic presidents) திருப்பணியேற்பர்.

### 4.3 பொதுநிலையினரின் ஆன்மீகம் (Lay Spirituality)

திருச்சபையில் புனிதமடைய அனைவருக்கும் ஒரே ஆழமான அழைப்பிருக்கின்றது (தி.அ. 39. 40). புனிதத்தின் சாரம் அதன் பின் நிறைவை நாடுவதாகும். இதை நாடுவதிலும், சீவிப்பதிலும் வெவ்வேறு வழியுண்டு. நற்செய்தி அறிவுரைகள் (Evangelical Counselxs) என வழங்கப்பெறும் நெறிகளைக் கடைப்படிப்பது ஒரு வழி (Religious Life). ஆனால் இதுதான் இலட்சிய வழி அல்லது இதுதான் முதற்தர புனிதத்துவத்தின் வழி என்றாற்போல் பொதுநிலை யினரும் இவ்வழியைக் குறுகிய முறையில் (Miniform) பின்பற்றுவதே அவர்களின் ஒரே ஆன்மீகம் என்பது தவறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்களோ, துறவிகளோ தமது ஆன்மீக வழிகளை (Priestly Spirituality, Monastic Spirituality) பொதுநிலையினர் மீது எவ்விதத்திலாவது திணிக்கலாகாது. பொதுநிலையினரும் அவ்வழி களைத் தம் வழிகளாக ஏற்பது தவறு.

கிறிஸ்தவ ஆன்மீகம் (Christian Spirituality) எவ்விதத்திலும் உலகத்தை தங்கள் வாழ்க்கை வட்டமாகக் கொண்டு பொதுநிலையினர் மத்தியில் கருத்தும் பொருத்தமுமுள்ளதாக அவதாரப்படுத்தப்பட வேண்டும் (Incarnate) என்பது ஆராய்ந்து படிக்க வேண்டிய ஒன்றாகும்.

பொதுநிலையினரின் ஆன்மீகம் இறைவார்த்தை, திருவருட் சாதனம், திருவழிபாடு இவைகளை இறைவனுடன் ஒன்றிப்பதற்கும் தம்மை ஊட்டி வளர்ப்பதற்கும் இன்றியமையாத ஊற்றுக்களாகக் கொண்டிருப்பினும் அவர்கள் குடும்பத்திலும், சமுதாயத்திலும் வகிக்கும் நிலையும், பொறுப்பும் பணியும் அவர்களின் ஆன்மீக உருவத்தை நிர்ணயிக்கும். தங்கள் வாழ்க்கை வட்டாரங்களிலே கிறிஸ்தவ தத்துவங்களைக் கடைப்பிடிப்பதிலும், கிறிஸ்தவ அன்பை வளர்ப்பதிலும் இவர்கள் ஆன்மீக வளர்ச்சி இன்றியமையாதது.

இறைவன் கிறிஸ்துவிலே உலகிற்குக் காட்டிய தன்னலமற்ற அன்பை தம் சேவையில் எடுத்துக்காட்டவும், இறைவன் சித்தத் தையும் தத்துவத்தையும் தம் வாழ்க்கை நிலைகள் அனைத்திலும் கடைப் பிடிப்பதே பொதுநிலையினரின் ஆன்மீகமென சங்கம் உணர்த்து கின்றது. (தி.அ.41g)

ஆகையால் பொதுநிலையினரின் ஆன்மீக ஆழத்தை அவர்கள். குருத்துவ, துறவற, ஆன்மீகத்தை எவ்வளவு பிரதிபலிக்கின்றாக ளென்பதை வைத்துக் கணக்கிட முடியாது. அவனவன் தன் உலகில் (குடும்பம், தொழில், சமுதாயம்) எவ்வளவிற்கு கிறிஸ்தவ அன்பையும், தத்துவங்களையும் கடைப்பிடிக்கின்றான் என்பதே ஆன்மீக அளவு கோலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரம் 5
# வருங்கால திரு அவையில்
# பொது நிலையினர்

திரு அவை தன் நோக்கிற்கிணங்க, வருங்கால உலகின் இரட்சணிய குறியாகவும், சேவையாளனுமாக (Sign and Servant of Salvation) தொடர்ந்து பணிபுரிய வேண்டும். திருச்சபையினுள்ளே திரு நிலைப்படுத்தப்பட்ட தலைவர்களும் ஏனைய பொதுநிலையினரும் தங்கள் இடத்தையும், பணியையும் தெளிவாக நன்குணர வேண்டும். பெரும்பான்மையான பொதுநிலையினரின் வரைவிலக்கணத்தை, சிறு பான்மையான குருக்கள் துறவிகள் தொடர்பிலே (in relation to clergy) தேடும் காலம் மலையேறி விட்டது.

நவீன முன்னேற்றங்களும் மாற்றங்களும் பொதுநிலையினரின் வாழ்வை மாற்றிக் கொண்டே போகின்றது. அவர்களை திரு அவை தலைவர்கள் அதிகாரம் நிறைந்தவர்களாக கட்டளையிட முடியாது. திரு அவையில் உரிமைகளும், கடமைகளும் கொண்ட முழுமையான அங்கத்தவர்கள் என்ற உணர்வு அவர்கள் மத்தியில் வளருகின்றது.

அவர்கள் கிறிஸ்து இரட்சகரின் குருத்துவ இறைவாக்கு அரச முப் பணிகளில் பங்கெடுக்க தயாராக இருக்கின்றனர். அவர்களுக்கு உகந்த உண்மையான அருட் கொடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த அருட் கொடைகளை குருக்கள் துறவியர் இனங் கண்டு கொள்ளவேண்டும். நவீன உலகமும் உலகத்தின் நவீன அமைப்புக்க ளும் இவர்களுக்குரிய வாழ்க்கை வட்டாரமும் இறையரசை வருவிக்கும் பணிக்களமுமாகும்.

இந்த விளக்கத்தில் இவர்களின் அப்போஸ்தல சேவை, திருப்பணி, ஆண்மீகம் அனைத்தும் ஆராயப்பட வேண்டும். முன்பு குருக்களும் துறவிகளும் தான் படித்தவர்கள் எல்லாவற்றையும் தெரிந்தவர்கள் என்றாற் போல பொது நிலையினரை மந்தைகளாக சிறு பிள்ளைகளாக நடாத்திய காலம் போய் விட்டது. இனறு எவ்வளவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களையும் அவர்களுக்கு இறைவன் கொடுத்திருக்கும் கொடைகளையும் மதித்து, அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து இடம் விடடு நடக்க குருக்களும் துறவியரும் முன் வர வேண்டும்.

வாழ்க்கையின் வெவ்வேறு வட்டாரங்களில் பொது நிலையினரே திறமையும் தத்துவமும் பெற்றிருக்கின்றனர் ஒரு சிலர் மருத்துவர் இன்னோர் சிலர் சட்டதரணினள் இன்னோர் சிலர் வாணிபர் அரசியல்வாதிகள் சமூக பணியாளர் - அவர்களே கூடி சிந்தித்து உரையாடி கிறீஸ்து ஆரம்பித்த இறையரசை எப்படி தங்கள் பணி உலகில் உருவாக்கலாம் என்பதை திட்டமிட வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்ய குருக்களும் துறவியரும் முன் வரவேண்டும். இவைகளை திரு அவை தலைவர்கள் எவ்வளவிற்கு ஆராய்ந்து அதற்கேற்ப வழி வகுக்கின்றோமோ, அவ்வளவிற்குத்தான் திரு அவை உலகிற்கு பொருத்தமான இரட்சணிய பணி புரிய முடியும்.

தனது வரைவிலக்கணத்திற்கு ஏற்றதாகவும், திரு ஆட்சி அமைப்பாளருடன் கூடி பணிபுரியக் கூடியதாகவுமுள்ள ஒரு பொது நிலையினர் கூட்டம் இல்லாவிட்டால்..... திருச்சபை உண்மையாகவே வேரூன்றவில்லை- முழு வாழ்வைக் கொள்ளவுமில்லை- மனிதர் நடுவே கிறிஸ்துவின் சின்னமாகவுமில்லை. **(A. G. 21)**

குறிப்பு:

2ம் வத்திக்கான் சங்க ஏடுகளுக்கான குறியீடுகள்.

L. G: திருஅவை

G. S: இன்றைய உலகில் திருச்சபை

A. G: திருச்சபையின் மறைபரப்புப் பணி

A. A: பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாதங்கள் கழுவிய
பணிவிடைச் செயலே வேதமானதே

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna. 021 222 2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org